# லோகோஸ் குயிஸ் - 2024
# கேள்வித்தாள் "C-F" Age Category

LOGOS QUIZ

(தேதி: 2024 செப்டம்பர் 29; நேரம் : 2.00 P.M. முதல் 3.30 P.M. வரை)

பாடப்பகுதி: நீதித்தலைவர்கள் 1-10, சீராக் 34-40, லூக்கா 9-16, 2கொரிந்தியர் 7-13

**அறிவிப்புகள் :**

1) இந்த கேள்வித்தாள் C-F வயது வரம்பிற்குட்பட்டவர்களுக்கு மட்டுமே. 2) தேர்வில் பங்குபெறும் அனைவருக்கும் வினாத்தாளும் விடைத்தாளும் ஹால் டிக்கட்டும் கொடுக்கப்படும். 3) விடைத்தாளில் உங்களுடைய பெயர், சென்டர் கோடு, வயதுபிரிவு, ஹால் டிக்கட் எண் போன்றவற்றை தெளிவாக எழுத வேண்டும். 4) மொத்தம் 103 வினாக்கள் உண்டு. முதல் 100 வினாக்களுக்கு a,b,c,d என்ற ஆங்கில எழுத்து வரிசையில் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. அவையில் ஒன்று மட்டுமே சரியான விடை. சரியான விடையை குறிக்கவும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களை அடையாளப்படுத்தக்கூடாது. 5) ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளை அடையாளப்படுத்தும் வினாக்களுக்கு ஒரு மதிப்பெண் வீதம் குறைக்கப்படும். விடைகளை வெட்டிதிருத்துவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

---

1. நான் செய்தவாறே கடவுள் எனக்கு செய்துள்ளார். இதைக் கூறியது யார்?
   a) அதோனிபெசாக் b) சேசாய் c) அகிமான் d) தல்மாய்

2. கிதியோன் முந்நூறு பேரை எத்தனைப்பிரிவாக பிரித்தார்?
   a) நான்கு b) மூன்று c) ஆறு d) ஐந்து

3. கொள்ளையடித்தவர்களின் கையிலிருந்து இஸ்ரயேல் மக்களை விடுவித்தது யார்?
   a) தானியேல் b) கிதியோன் c) நீதித்தலைவர்கள் d) இப்தா

4. இஸ்ரயேல் மக்கள் மோவாபின் மன்னன் எக்லோனுக்கு எத்தனை வருடம் அடிமைப்பட்டிருந்தனர்?
   a) பதினெட்டு b) பதிமூன்று c) பதினைந்து d) பத்து

5. நீதித்தலைவர்கள் நூல் மிகவும் பருத்த மனிதன் என யாரைக் குறிப்பிடுகிறது?
   a) யாபின் b) ஏகூது c) சம்கார் d) எக்லோன்

6. எந்த அரசரின் காலத்தில் இருபது வருடமாக இஸ்ரயேல் மக்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர்?
   a) எக்லோன் b) சிசேரா c) யாபின் d) கூசான்ரிஷாத்தாயிம்

7. கூடாரம் வாழ் பெண்களுள் பேறுபெற்றவர் யார்?
   a) அக்சா b) தெபோரா c) யாவேல் d) ரூத்து

8. மிதியானியரின் கைகளின் இருந்து இஸ்ரயேல் மக்களை விடுவிக்க ஆண்டவர் தேர்வு செய்த கிதியோன் எந்த குலத்தைச்சேர்ந்தவர்?
   a) காத்து b) செபுலோன் c) நப்தலி d) மனாசே

9. எங்கிருந்து வந்த தீயில் கிதியோன் ஆண்டவரின் தூதருக்கு கொடுத்த இறைச்சியையும் அப்பத்தையும் எரித்தார்?
   a) முள்படர்ப்பிலிருந்து b) ஆகாயத்திலிருந்து c) அசேராக் கம்பத்திலிருந்து d) பாறையிலிருந்து

10. கிதியோனின் தலைமகன் யார்?
    a) அபிமெலேக் b) யோத்தாம் c) எத்தேர் d) யோவாசு

11. பாகால் பெரித்தை தங்கள் தெய்வமாகக் கொண்டதால் இஸ்ரயேல் மக்கள் யார் வீட்டிற்கு நன்றி காட்டவில்லை?
    a) கிதியோனின் b) காலின் c) சிசேராவின் d) மிதியானியரின்

12. தாண் மக்களை மலைநோக்கி செல்லுமாறு செய்தது யார்?
    a) கானானியர் b) எமோரியர் c) மோவாபியர் d) இத்தியர்

13. சம்கார் கலப்பை கொழுவால் எத்தனை பெலிஸ்தியரை கொன்றார்?
    a) அறுநூறு b) நாநூறுக்கும் மேல் c) இருநூறு d) நாநூறு

14. யாபினின் படைத்தலைவன் சீசராவை எங்கு வைத்து உம் கையில் கொடுப்பேன் என்று ஆண்டவர் பாராக்கிடம் கூறினார்?
    a) கில்காலுக்கு அருகே b) தாபோர் மலையில் c) சீசோன் ஆற்றின் அருகில் d) கெதேசில்

15. தெபோராவின் வெற்றிப்பாடலில் பாராக்குடன் சென்றவர் யார் என குறிப்பிடப்பட்டுள்ளது?
    a) இசக்காரின் மக்கள் b) பெஞ்சமினின் மக்கள் c) தெபோரா d) ஜாயேல்

16. "................. போராடுபவன் காலைக்குள் கொல்லப்படுவான்" நிரப்புக.
    a) அசேராவுக்காக b) பாகாலுக்காக c) கூசான்ரிஷாத்துக்காக d) அதோனிபசேக்குவிற்காக

17. அபிமெலேக்கிற்கும் செக்கேம் குடிமக்களுக்கும் இடையே கடவுள் எதை அனுப்பினார்?
    a) வெறுப்பை b) பொறாமையை c) போட்டியை d) கடும்பகையை

18. அபிமெலேக்கிற்கு பிறகு இஸ்ரயேல் மக்களை விடுவிக்கவந்தது யார்?
    a) யோத்தாம் b) தோலா c) இப்தா d) யாயீர்

19. மரங்கள் தங்களுக்கு ஓர் அரசனை திருப்பொழிவு செய்ய புறப்பட்டபோது முதலில் சென்றது யாரிடம்?
    a) ஒலிவமரத்திடம் b) முட்புதர் மரங்களிடம் c) அத்திமரத்திடம் d) திராட்சை செடியிடம்

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள நீதி தலைவர்களில் இருபத்தி இரண்டு வருடங்கள் நீதி தலைவராக விளங்கியது யார்?
    a) தோலா b) அபிமெலேக்கு c) கிதியோன் d) யாயீர்

21. தெபோரா பாராக்கின் வெற்றிப்பாடலில் ஆண்டவரின் தூதர் யாரை சபிக்கவேண்டும் என்று கூறுகிறார்?
    a) சுக்கோத்து மக்களை b) மேரோசு மக்களை c) பெனியேல் மக்களை d) கானானியர் மக்களை

22. மிதியானியரிடமிருந்து இஸ்ரயேல் மக்களை விடுவிப்பதற்காக கிதியோன் அழைத்திருந்த குலம் எது?
    a) ஆசேர் b) தாண் c) செபுலோன் d) நப்தலி

23. உமது படைக்கு நாங்கள் ஏன் உணவு கொடுக்க வேண்டும் என்று கிதியோனிடம் கூறியது யார்?
    a) மிதியானிய மக்கள் b) பெனியேலின் மக்கள் c) எப்ராயிம் மக்கள் d) சுக்கோத்தின் மக்கள்

24. எருபாகால் என்ற பெயரின் பொருள் என்ன?
    a) பாகால் அவனோடு போராடட்டும்
    b) பாகால் மக்களோடு போராடட்டும்
    c) பாகாலே போராடி கொள்ளட்டும்
    d) பாகால் அவனுக்காகவே போராடிக்கொள்ளட்டும்

25. நீதித் தலைவர்களின் நூலில் இஸ்ரயேல் மக்கள் முதன் முதலில் ஆண்டவருக்காக பலியிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள இடம் எது?
    a) லூசு b) பொக்கிம் c) பெனியேல் d) அஸ்கலோன்

26. சிலவற்றை மட்டுமே அறிபவர்கள் யார் என சீராக் கூறுகிறார்?
    a) நம்பிக்கை இல்லாதவர்கள் b) இறைபக்தி இல்லாதவர்கள் c) செயலறிவு இல்லாதோர் d) சட்டத்தை மதிக்காதவர்கள்

27. சீராக்கின் எண்ணப்படி ஏற்றுக்கொள்ளதக்கதும் அதன் நினைவு நீங்காதததுமான பலி யாருடையது?
a) எளிமையானவர்களின் b) நம்பிக்கையாளரின்
c) இறைபயம் கொண்டோரின் d) நேர்மையாளரின்

28. அவரே அவர்களது நம்பிக்கை அவர்கள் யார்?
a) ஆண்டவருக்கு அஞ்சுவோர் b) சட்டத்தை மதிப்போர்
c) நம்பிக்கை கொண்டோர் d) நீதிமான்கள்

29. சீராக் 34-ம் அதிகாரத்தில் எத்தனை கேள்விகள் கேட்க்கப்படுகின்றன?
a) நான்கு b) ஆறு c) ஏழு d) எட்டு

30. நல்லுரவு பலி செலுத்துவது எதற்கு சமம் என சீராக் கூறுகிறார்?
a) தீச்செயலை விட்டு விலகுவது
b) தர்மம் செய்வது
c) அநீதியை கைவிடுவது
d) கட்டளைகளை கருத்தில் கொள்வது

31. சீராக்கின் கருத்தில் பலவற்றை அறிந்திருப்பது யார்?
a) ஞானி
b) விவேகம் உள்ளவர்
c) பலநாடுகளுக்கு சென்று வந்தோர்
d) அறிவாளி

32. "பத்தில் ஒரு பங்கில் மகிழ்ச்சியோடு கடவுளுக்கு உரித்தாக்கு" அதிகாரம் வசனம் எது?
a) 35:12 b) 35:13 c) 35:8 d) 35:14

33. ஏழைகளுக்கு எதிராக எவரையும் ஒருதலை சார்பாய் ஏற்கமாட்டார் யாருடைய மன்றாட்டை கேட்பார்?
a) பாவியின் b) அனாதையின்
c) தீங்கிழைக்கப்பட்டோரின் d) ஏழையின்

34. ஆண்டவர் ஏற்கமாட்டார் என்று சீராக் 35-ஆம் அதிகாரம் கூறுவது என்ன?
a) நீதியற்றோரின் மன்றாட்டை
b) நேர்மையற்ற பலியை
c) பாவியின் பலியை
d) கையூட்டு கொடுப்பதை

35. யாருடைய காணிக்கைகளை உன்னத இறைவன் விரும்புவது இல்லை?
a) நம்பிக்கை இல்லாதவரின்
b) நேர்மையற்றோரின்
c) இறைப்பற்று இல்லாதோரின்
d) சட்டத்தை மறுப்பவரின்

36. சீராக்கின் எண்ணப்படி ஒரு ஆண் யாரை அடையும் போது உடைமையைப் பெறுகிறான்?
a) அன்பை b) மனைவியை
c) செல்வத்தை d) பொன்னை

37. "உமது .............. சீயோனை நிரப்பும்". நிரப்புக
a) புகழ்ச்சியால் b) அன்பால்
c) இரக்கத்தால் d) அற்புதத்தால்

38. அன்புக்கு கைமாறு செய்வது எந்த பலிக்கு இணையானது?
a) நல்லுறவு பலிக்கு b) நன்றி பலிக்கு
c) மாவுப்படையல் அளிப்பதற்கு d) பாவக்கழுவாய் பலிக்கு

39. சீராக்கின் எண்ணப்படி ஆண்டவரின் தலைப்பேறாக பெயரிடப்பட்டவர் யார்?
a) யூதா b) இஸ்ரயேல் c) ஆபிரகாம் d) மோசே

40. யாரிடம் நன்றியைப்பற்றி பேசக்கூடாது என சீராக் கூறுகிறார்?
a) வணிகரிடம் b) வாங்குபவரிடம்
c) பொறாமை கொள்பவரிடம் d) கொடியவரிடம்

41. சீராக்கின் எண்ணப்படி யாருடைய பெயர் நீடூழி வாழும்?
a) மனிதனின் b) இறைபயம் மிக்கவரின்
c) ஞானியின் d) இஸ்ரயேலின்

42. மனித வாழ்வின் அடிப்படை தேவைகளில் ஏழாவது கூறப்பட்டது எது?
a) பால் b) தேன்
c) கோதுமை மாவு d) உப்பு

43. "......... கட்டுப்படுத்துகிறவர் எவரும் இல்லை". நிரப்புக
a) ஆற்றலை
b) மீட்பை
c) மீட்பளிக்கும் அவரது ஆற்றலை
d) அன்பை

44. எதிர்காலத்தையும் இறுதி நாளையும் பற்றிய எண்ணங்கள் சிந்தனையை குழப்பி யாரை அச்சுருத்துகின்றன?
a) கொடியவரை b) பாவம் செய்தவரை
c) ஆதாமின் மக்களை d) இறைபயம் இல்லாதவர்களை

45. "எல்லா கையூட்டும் அநீதியும் அழித்தொழிக்கப்படும் .......... என்றென்றும் நிலைத்திருக்கும்" நிரப்புக.
a) பற்றுருதி b) அன்பு
c) நம்பிக்கை d) நன்றி

46. சீராக்கின் கருத்துப்படி மகிழ்ச்சி அடைவது யார்?
a) இறைபயம் உள்ளவர் b) சொத்து உள்ளவர்
c) இரக்கம் உள்ளவர் d) வல்லமை கொண்டோர்

47. "........... எல்லாவகை உணவுகளையும் உட்கொள்கிறது". நிரப்புக
a) ஏழை b) அயலான் c) வயிறு d) சோம்பேறி

48. சீராக்கின் எண்ணப்படி பொன்களையும் வெள்ளியையும்விட மேலானதாக மதிக்கப்படுவது எது?
a) ஞானம் b) அறிவுரை c) இறைபயம் d) தருமம்

49. பிச்சை எடுப்பது யாருடைய வாயில் இனிக்கும்?
a) வெட்கமில்லாதவரின் b) ஏழையின்
c) அறிவீனரின் d) கொடியவரின்

50. "......... பலரை நெறிப்பிறழச் செய்துள்ளனர்". நிரப்புக
a) கனவுகள் b) இறைபயம் இல்லாதவர்
c) பகைவர்கள் d) கொடியவர்

51. கடவுளின் மாண்பை கண்டு மலைத்துநின்றார்கள் எந்த அற்புதத்திற்கு பிறகு லூக்கா இதைக்கூறுகிறார்?
a) கூனுள்ள பெண்ணை குணப்படுத்தியபிறகு
b) பேய்பிடித்த சிறுவனின் பிணிதீர்த்தப்போது
c) நீர்க்கோவை பாதித்த நோயாளியை குணப்படுத்தியபின்
d) இவைகள் இல்லை

52. லூக்கா 11:13-ல் இயேசு இறையரசை எதோடு ஒப்பிடுகிறார்?
a) அத்திப்பழம் b) புளி
c) கடுகுவிதை d) மூன்றுமரக்கால் மாவு

53. இக்காலத்தை ஆய்ந்துபாராமல் இருப்பவர்களை இயேசு எவ்வாறு அழைக்கிறார்?
a) பரிசேயர்களே
b) சோம்பேறிகள்
c) நம்பிக்கையற்றவர்கள்
d) வெளிவேடக்காரர்கள்

54. இறைவனிடம் அடைக்கலம் புக வேண்டும் என்பது குறித்து இயேசு யாரிடம் கூறினார்.?
a) மக்கள் கூட்டத்திடம் b) சீடர்களிடம்
c) மூடனான பணக்காரர்களிடம் d) பரிசேயர்களிடம்

55. "மனம்மாறிய ஒரு பாவியைக்குறித்து கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும்". இயேசு இதை எந்த உவமையில் கூறுகிறார்?
a) காணாமல் போன மகன் உவமை
b) காணாமல் போன ஆடு உவமை
c) காணாமல் போன நாணயம் உவமை
d) கடுகுவிதை உவமை

56. பெரிய விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தவர் அழைக்கப்பட்டவர்களை அழைத்தப்போது சாக்குபோக்கு சொன்னவர்கள் எத்தனை?
a) 3 b) 4 c) 2 d) 5

57. இயேசு ஒருமுறை தனது சீடர்களை கடிந்துகொண்டார் எந்த இடத்தில்?
a) எருசலேமில் b) கப்பர்நாகூமில்
c) பெத்சாயிதாவில் d) சமாரியாவில்

58. என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார் தந்தையைத்தவிர வேறு எவரும் மகனை அறியார். தந்தை யார் என்று மகனுக்கு தெரியும் மகன் யாருக்கு வெளிப்படுத்த விரும்புகிறாரோ அவருக்கும் தெரியும் வேறு எவறும் தந்தையை அறியார் இறைவார்த்தை வசனம் எது?
a) லூக்கா 10:22 b) லூக்கா 10:23
c) லூக்கா 11:23 d) லூக்கா 11:22

59. "............... காசுக்கு .......... சிட்டுக்குருவிகள் விற்பது இல்லையா" நிரப்புக.
a) ஐந்து, இரண்டு b) இரண்டு இரண்டு
c) இரண்டு ஐந்து d) ஐந்து ஐந்து

60. இந்த தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர் இயேசு இவ்வாறு யாரிடம் கூறினார்?
a) மறைநூல் அறிஞரிடம் b) சீடர்களிடம்
c) மக்கள் கூட்டத்திடம் d) பரிசேயரிடம்

61. லூக்கா நற்செய்தியின்படி நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என இயேசுவிடம் கேட்டது யார்?
a) திருச்சட்ட அறிஞர் b) பரிசேயர்
c) ஒரு இளைஞர் d) பிற இனத்தவர்

62. லூக்கா 9-ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள காரியங்கள் நான்கு நற்செய்திகளிலும் காணப்படுவது எது?
a) திருத்தூதர்களை அனுப்புவது
b) பேதுருவின் நம்பிக்கை அறிக்கை
c) இயேசு உருமாற்றம் அடைகின்றார்
d) அப்பத்தை பலுகச்செய்தது

63. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் லூக்கா நற்செய்தியில் மட்டும் காணப்படும் உவமை எது?
a) காணாமல்போன ஆடு உவமை
b) காணாமல்போன நாணய உவமை
c) பெரிய விருந்தின் உவமை
d) கடுகுவிதை உவமை

64. காணாமல் போன மகன் உவமையோடு தொடர்புடைய வார்த்தை எது?
a) இளையமகன் சோம்பேறியாக இருந்து சொத்தை அழித்தான்
b) இளையமகன் சொத்தை அழித்துவிட்டான்
c) தந்தை மூத்த மகனுக்கு ஆறுதல் கூறுகிறார்
d) பன்றிகளுக்கு கொடுத்திருந்த நெற்றுகளால் வயிறு நிறையவேண்டி இருந்தது

65. இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும் பட்டிகளுக்கும் சென்று தங்கவும் உணவு வாங்கிக்கொள்ளவும் மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும் இதை கூறியது யார்?
a) இயேசு b) பனிரெண்டுபேர்
c) பேதுரு d) சீடர்கள்

66. பேய்களின் தலைவனாகிய பெயர்செபூலைக்கொண்ட இவன் பேய்களை ஒட்டுகிறார் இயேசுவைக்குறித்து இதைக்கூறியவர் யார்?
a) மக்கள் கூட்டம் b) பரிசேயர்களில் சிலர்
c) பரிசேயர் d) மக்கள் கூட்டத்தில் சிலர்

67. அறிவு களஞ்சியத்தின் திறவுகோலை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் என இயேசு யாரிடம் கூறினார்?
a) பரிசேயர்களோடு
b) திருச்சட்ட அறிஞர்களிடம்
c) சதுச்சேயர்களிடம்
d) பரிசேயர்களோடும் திருச்சட்ட அறிஞர்களோடும்

68. பலிபீடத்திற்கும் தூயகத்துக்கும் நடுவே சிந்தப்பட்ட இரத்தம் யாருடையது?
a) எரேமியாவின் b) பாருக்கின்
c) சக்கரியாவின் d) ஆபேலின்

69. ஏரோது இயேசுவை கொல்லவேண்டும் என்றிருக்கிறான் என இயேசுவிடம் கூறியது யார்?
a) பரிசேயர்கள்
b) திருச்சட்ட அறிஞர்கள்
c) சீடர்கள்
d) ஏரோதுவைச்சேர்ந்தவர்கள்

70. ஆபிரகாமின் மகனாகிய இவரை பதினெட்டு ஆண்டுகளாக சாத்தான் கட்டிவைத்திருந்தான் இந்த கட்டிலிருந்து இவரை ஓய்வு நாளில் விடுவிப்பது முறையில்லையா இயேசுவின் இந்தக் கேள்வியைக் கேட்டு வெட்கமடைந்தது யார்?
a) இயேசுவை எதிர்த்தவர்கள்
b) மக்கள் கூட்டம்
c) சீடர்கள்
d) ஏரோதுவை சேர்ந்தவர்கள்

71. லூக்கா 15-ஆம் அதிகாரத்தில் இயேசுவின் வார்த்தைகளை கேட்பதற்காக அவரிடம் வந்தவர்கள் யாரெல்லாம்?
a) பெரிய மக்கள் கூட்டம்
b) வரிதண்டுவோரும் பாவிகளும்
c) பரிசேயர்களும் திருச்சட்ட அறிஞர்களும்
d) சீடர்கள்

72. கடுகுவிதை உவமைக்குப்பிறகு உடனே வரக்கூடிய உவமை எது?
a) அத்திமரம்
b) பெரிய விருந்தின் உவமை
c) புளிப்புமாவு உவமை
d) காணாமல் போன ஆடின் உவமை

73. லூக்கா 13:25-ல் இல்லாத வார்த்தை எது?
a) அபிரகாம் b) ஈசாக்கு
c) இறைவாக்கினர்கள் d) மோசே

74. ஓய்வு நாளில் சுகப்படுத்தியது முறையில்லையா என இயேசு யாரிடம் கேட்டார்?
a) திருச்சட்ட அறிஞரிடம்
b) திருச்சட்ட அறிஞரோடும் பரிசேயர்களிடமும்
c) பரிசேயர்களோடு
d) பகைவர்களோடு

75. "தம் சிலுவையை சுமக்காமல் என்பின்னே வருபவர்கள் எனக்குச் சீடராய் இருக்க முடியாது" அதிகாரம் வசனம் எது?
a) லூக்கா 11: 27 b) லூக்கா 14: 24
c) லூக்கா 14:14 d) லூக்கா 14: 33

76. ஆண்டவர் பவுலுக்கு அதிகாரத்தை அளித்தது ஏன்?
a) கொரிந்தியர்களை வளர்ப்பதற்கு
b) கொரிந்தியர்களை புதுப்பிக்க
c) கொரிந்தியர்களின் வளர்ச்சிக்காக
d) கொரிந்தியர்களுக்கு கற்பிக்க

77. பெற்றோருக்கு பிள்ளைகள் செல்வம் சேமித்து வைக்க வேண்டியதில்லை, மாறாக பெற்றோரே பிள்ளைகளுக்கு சேமிக்க வேண்டும் அதிகாரம் வார்த்தை எழுதுக?
a) 2 கொரிந்தியர் 13:3 b) 2 கொரிந்தியர் 10:14
c) 2 கொரிந்தியர் 11:15 d) 2 கொரிந்தியர் 12:14

78. வெளியே போராட்டம் உள்ளே அச்சம் பவுலடியாரின் இந்த வார்த்தை எங்குள்ள துன்பங்களை காட்டுகிறது?
a) கொரிந்து b) மாசித்தோனியா
c) அக்காயா d) கலாத்தியா

79. கொரிந்தியருக்கான பணியில் என் பணியின் பங்காளியும் உடன் உழைப்பாளருமானவர் என பவுலடியார் யாரை சிறப்பிக்கின்றார்?
a) லூக்காவை b) சில்வானுசை
c) தீத்துவை d) கேப்பாவை

80. ".......... கடவுளின் திருமுன் கிறிஸ்துவழியால் உங்களுக்கு சொல்கிறேன் நான் செய்வதெல்லாம் உங்கள் வளர்ச்சிக்காகவே" நிரப்புக.
a) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே b) பிள்ளைகளே
c) சகோதரர்களே d) அன்பானவர்களே

81. தாழ்ந்தோருக்கு ஆறுதல் அளிக்கும் கடவுள் யாருடைய வரவால் பவுலுக்கும் நண்பர்களுக்கும் ஆறுதல் கொடுத்தார்?
a) சில்வானுசின் b) தீத்துவின்
c) தீமோத்தேயுவின் d) சகோதரர்களின்

82. யாருக்கு செய்யும் அறப்பணியில் பங்குபெறும்பேறு தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என மாசித்தானியர்கள் பவுலடியாரிடம் கேட்டனர்?
a) ஆண்டவருக்கு b) கொரிந்தியர்களுக்கு
c) மாசித்தோனிய திருச்சபைக்கு d) இறைமக்களுக்கு

83. பவுலடியார் எத்தனைமுறை சாட்டையில் அடிக்கப்பட்டார்?
a) ஒன்று b) இரண்டு c) மூன்று d) நான்கு

84. கொரிந்தியர்கள் மிகுதியாய் கொண்டிருப்பதாக பவுலடியார் கூறுவதில் மூன்றாவது காரியம் என்ன?
a) நம்பிக்கை b) அறிவு c) நாவன்மை d) பேரார்வம்

85. கடவுளுக்கு ஏற்புடைய முறையில் தாங்கிக்கொள்ளப்படும் மனவருத்தம் மீட்புத்தருகிறது- உலகப்போக்கிலான மனவருத்தம் எதைத்தருகிறது?
a) பச்சாதாபத்தை b) நீதியை
c) பயத்தை d) சாவை

86. பாம்பு சூழ்ச்சினால் யாரை ஏமாற்றியது?
a) கொரிந்தியர்களை b) பவுலை
c) ஏவாளை d) பெண்ணை

87. அரேத்தாவின் கீழிலிருந்த ஆளுநர் பவுலை பிடிப்பதற்காக எந்த நகர வாயிலில் காவல் வைத்தார்?
a) பிலிப்பி b) துரோவா
c) மாசித்தோனியா d) தமஸ்கு

88. "ஊதியம் எதுவும் எதிர்பார்க்காமல் நான் உங்களுக்கு .............................. அறிவித்தேன். நீங்கள் உயர்வுபெற நான் தாழ்வுற்றேன். இதுதான் நான் செய்த பாவமா" நிரப்புக
a) கிறிஸ்துவின் நற்செய்தி
b) ஆண்டவரின் வார்த்தையே
c) ஆண்டவரின் நற்செய்தி
d) நற்செய்தி

89. 2 கொரிந்தியர் 13:11-ல் பவுலடியார் கூறும் அறிவுரையில் உட்படாதது எது?
a) அமைதியுடன் வாழுங்கள்
b) மன ஒற்றுமைகொண்டிருங்கள்
c) என் அறிவுரையை கேளுங்கள்
d) மகிழ்ச்சியாய் இருங்கள்

90. 2 கொரிந்தியர் 11-ஆம் அதிகார்த்தில் பவுலடியார் கொரிந்தியர்களை ஆண்டவர் திருமுன் எவ்வாறு நிருத்துத்துவது அவரது விருப்பம் என கூறுகிறார்?
a) புனிதர்களாக b) இறைமக்களாக
c) திறமையானவர்களாக d) கற்புள்ள கன்னியாக

91. கொரிந்தியர்களுக்கிடையே எனக்கு ஓர் அச்சம் என பவுலடியார் கூறுவதில் ஐந்தாவது காரியம் என்ன?
a) அவதூறு பேசல் b) அகங்காரம்
c) பொறாமை d) புரம்கூறுதல்

92. "உங்கள் நகர்வரை நாங்கள் வராமல் இருந்திருந்தால் அளவுமீறி பெருமைகொண்டவர்கள் ஆவோம். ஆனால் .............. அறிவிக்க உங்கள் நகருக்கு முதன் முதல் வந்தவர் நாங்களே". நிரப்புக.
a) ஆண்டவரின் நற்செய்தியை
b) ஆண்டவரின் வார்த்தையை
c) இறைவனின் வார்த்தையை
d) கிறிஸ்துவின் நற்செய்தியை

93. தூயவாழ்வில் நிறைவடைவது எப்படி?
a) உடலில் b) இறையன்பில்
c) கடவுளுக்கு அஞ்சி d) ஜெபத்தால்

94. கொரிந்தியர்கள் பேரிலுள்ள அதே ஆர்வத்தை யாருடைய உள்ளத்தில் கடவுள் தூண்டி எழுப்பினார்?
a) தீமோத்தேயுவின் b) தீத்துவின்
c) சில்வானுசின் d) பவுலின்

95. "அவர்கள் தங்களேயே அளவுகோலாக கொண்டு தங்களை அளவிட்டுக்கொள்கிறார் ஒப்பிட்டுகொள்கிறார்கள்" இது அறிவீனம் அவர்கள் யார்?
a) தாங்களே நற்சான்று கொடுப்பவர்கள்
b) தற்பெறுமை கொள்பவர்
c) வீண்பேச்சு பேசுபவர்கள்
d) புரணிபேசுபவர்

96. "பெருமைபாராட்ட விரும்புகிறவர் ................................ குறித்தே பெருமை பாராட்டட்டும்" நிரப்புக
a) கிறிஸ்துவை b) ஆண்டவரைக்
c) கடவுளைக் d) பலவீனத்தைக்

97. பவுலடியார் எவ்வளவு நாட்கள் கடலில் அல்லலுற்றார்?
a) ஒரு இரவு b) ஓர் இரவும் பகலும்
c) ஓர் இரவும் இரண்டு பகலும் d) ஒரு பகல்

98. "என் அருள் உனக்குப்போதும் வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" அதிகாரம் வசனம் எழுது
a) 2 கொரி 12:10 b) 2 கொரி 12:9
c) 2 கொரி 12:8 d) 2 கொரி 12:5

99. "இந்த ............ எனக்கு முன்னால் உங்களிடம் வந்து நீங்கள் வாக்களித்த நன்கொடையை திரட்டிவைக்க முன்னேற்பாடு செய்தால் நான் அங்கு வரும்போது தயார் நிலையில் இருக்கும்". நிரப்புக
a) சகோதரர்கள் b) கொரிந்தியர்கள்
c) கொரிந்து சபை d) புனிதர்கள்

100. "கடவுளின் சொல்லொண்ணாக் கொடைக்காக அவருக்கே நன்றி உரித்தாகுக". அதிகாரம் வசனம் எது?
a) 2 கொரி 9:13 b) 2 கொரி 9:15
c) 2 கொரி 10:14 d) 2 கொரி 10:12

---

**இறைவார்த்தை எழுதவும்,**

நூறு கேள்விகளும் சரிபார்த்தபின் பலருக்கு ஒரே அளவு மதிப்பெண் கிடைத்தால் இடத்தை நிர்ணயிப்பதற்காக இறைவார்த்தை எழுத்து பரிசீலிக்கப்படும்.

101. சீராக் 34:4

102. லூக்கா 13:3

103. 2 கொரி 11:30


# 25-ம் அகில கேரள விவிலிய தியானத்திற்கு வரவேற்க்கிறோம்!
# லோகோஸ் குவிஸ் - 2025

**பாடப்பகுதி: நீதித்தலைவர்கள் 11-21, சீராக் 41-50, லூக்கா 17-24, எபேசியருக்கு எழுதிய திருமுகம் 1-6**

மறைமாவட்ட தேர்வு நாள் :
2025 செப்டம்பர் 28, 2.00 pm முதல் 3.30 pm வரை
மாநில அளவிலான தேர்வு நாள் : 2025 நவம்பர் 9, 22-23
பதிவு துவங்கும் நாள் : 2025 ஜூன் 1
பதிவு நிறைவடையும் நாள் : 2025 ஜூலை 31

**வயது வரம்புகள்**
A பிரிவு 1-1-2014 ற்கும் அதற்கு பிறகும் பிறந்தவர்கள்
B பிரிவு 1-1-2009 ற்கும் 31 -12-2013 ற்கும் இடையில் பிறந்தவர்கள்
C பிரிவு 1-1-1994 ற்கும் 31 -12-2008 ற்கும் இடையில் பிறந்தவர்கள்
D பிரிவு 1-1-1974 ற்கும் 31 -12-1993 ற்கும் இடையில் பிறந்தவர்கள்
E பிரிவு 1-1-1961 ற்கும் 31 -12-1973 ற்கும் இடையில் பிறந்தவர்கள்
F பிரிவு 31-12-1960 ற்கும் அதற்கு முன்பு பிறந்தவர்கள்

**மாநில அளவிலும் மறைமாவட்ட அளவிலும் பங்குத்தளத்திலும் கவர்ச்சிகரமான பரிசுகளும் சான்றிதழ்களும்**

**நடத்துபவர்கள் - கேரளா காத்தலிக் பைபிள் சொசைட்டி**

Website: **www.keralabiblesociety.com**

லோகோஸ் குவிஸ் 2024-ன் விடைகளுக்கு அக்டோபர் மாதம் 15-ம் தேதிக்கு பிறகு வெப்சைட்டை காணவும்